
# திறவுகோல்

2052 ஆவணி
மாத இதழ்



**வெளியீடு**
**மன்னையின் மைந்தர்கள் அமைப்பு**

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும்  முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு சேல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# அவசர கால ஊர்தி இயக்குவோருக்கு சமர்ப்பணம்

அவசர கால ஊர்தியை
அதிவேகமாய் இயக்கி
ஆபத்தில் சிக்கியவரை காக்க
தன் உயிரை துச்சமென எண்ணும்
கருணை உள்ளம் கொண்டவர்கள்

சாலை விபத்தறிந்து
சைரனுடன் (ஒலி) வந்திறங்கி
சாதி மத பேதமின்றி
சற்றும் சளைக்காமல்
உதவிக்கரம் நீட்டுபவர்கள்

இரவு பகல் பாராது
இம்மியளவும் கண் துஞ்சாது
இறந்தவரை உரியோர்
இல்லம் சேர்க்கும் கடமை
தவறாவதர்கள்

மதிக்கெட்ட மக்களின்
மிருகக்குணத்தால்
மிதிப்பட்டும், வசைக்கேட்டும்
மனம் நோகாது மனிதநேயம் காப்பதில்
மாசற்ற தெய்வங்கள்

பிறந்த போது குழந்தை
வாழும் போது மனிதன்
இறந்த பின் பிணம்
பிறக்கும் போதும், இறந்த
பின்பும் நடப்பது தெரியாது.
வாழும் போது மனிதனாவது
மனித நேயத்தால்.....

என்றும் குறையாமல் மனித
நேயத்துடன் சேவையாற்றும்
அவசரகால ஊர்தி இயக்கும்
அனைவரையும்
வாழ்த்துவோம்.

–
மு.ஜெரோஷா,
திருப்பூர்



அட்டைப்பட
ஓவியம்:
இரா.மதுவர்ஷினி,
சரஸ்வதி வித்யாலயா பள்ளி,
பெருவிடைமருதூர்.



முனைவர். சா.சம்பத்
தேசிய பயிற்சியாளர்
மன்னார்குடி

# தனியார் மயம்... !?

பொதுத் துறைகள்
தனியார் மயம்...!
கண்களை விற்று
சித்திரம் வாங்குவதா...!?

தனியார் வந்ததால்
தவிப்பில் உள்ளது
அஞ்சல் பெட்டி.....!?

கார்ப்பரேட் வந்ததால்..!
காணாமல் போகின்றன...
அரசின் தொலை தொடர்பு...!?

பண முதலாளிகள்..
பங்கினால்..!
பரிதவிக்கும்...
காப்பீட்டு நிறுவனம்...!?

ரயில்வேயில்
அந்நியர்கள்..!
பணக்காரர்கள்...
மட்டுமே பயணம்...!

மின்சாரம்
தனியார் மயம்....
தனி மனித
ஆபத்து...!!

இன்னும் -
தனியார் மயமாக்க
வேண்டியது..
அரசாங்கம் மட்டுமே...!?

# நெடுநாளைக்கு

பிறகு - ஓர்
ஆழ்ந்த தூக்கத்தின்
அகவெளிக்குள்
இன்பம் கண்டேன்...!

புதிதாக பிறந்தேன்.

பிறப்பின் அர்த்தம்
தெளிவாக புரிந்தது..!

பார்க்கும்
வானம் புதிது..!

பேசும்
சொல்லில்
புதிது...!

காடு,
மலை,
நதி.
கடல்,
சமவெளியென.

எங்கும் நிறைந்த
இயற்கையோடு
சஞ்சரிக்கவே மனம்
விரும்புகிறது...!

இப்போது
எனக்குள்
யாருமில்லை...!

வானம் பார்த்து
பறக்கும் - ஒரு
பறவையின் சிறகையின் போல
எடையற்றதாக
இருக்கிறது...!

மனம்...!

–

அ. செல்வராஜ்,
க. நா. ஊர்.
உடுமலைப்பேட்டை..

# உச்சிக் கதிரவனை

அடிவயிற்றில்
சுமந்தபடி
முடங்கிக் கிடக்கிறாள்
பெருநகரத்துக் கிழவியொருத்தி...

அவள் ஞாபகத் திரட்சியின்
சிறு இணுக்குகளில்.,
உதிர்ந்து உடைகிறது
கத்தரிக்காயும்,
கருவாட்டுக் குழம்பும்...

கன்னங்களில்
வழியும்
துளிகளின் தடங்களில்.,
இன்னும் மிச்சமிருக்கிறது
விறகடுப்பில் வடித்த
சுடுகஞ்சியும்,
குருணைச் சோறும்...

பயணச்சீட்டு தேடும்
பதட்டத்தில்
கவனியாமலே
கடந்து போகும்
கரங்களில் ஏதோ ஒன்றில்
அகப்படலாம் அவளின்
அன்றைய பொழுதின்
கடவுச்சீட்டு...

அதுவரைக்கும்
பார்த்துக் கொள்ள வேண்டும்.,
இறுக்கிக் கட்டிய
துணியின் ஈரத்தைக்
காய விடாமல்.

- இனியவன் காளிதாஸ்

# துளிப்பாக்கள்

கடலில் குளித்தாலென்ன
மழைக்கு அஞ்சி ஒடிவிட்டது
நிலா

புத்தரின் முகத்தை
துடைத்து விடுகிறது
சிறகசைக்கும் பட்டாம்பூச்சி

மரத்தினடியில் நிழலை
வண்ணமயமாக்கியது
தேங்கிய மழைநீர்

அத்தனை பயணிகளுக்கும்
கைகளையசைத்து வழியனுப்பும்
நெடுஞ்சாலையோர மரம்

வரப்பின் இருபுறமும்
மாறி மாறி படுத்துக்கொள்ளும்
பகலில் தென்னை மரம்

புல்லாங்குழல் செய்ய
மூங்கிலை வெட்ட
அப்போதும் கேட்கிறது இசை

சுட்டெரிக்கும் சூரியனை
தன்னில் குளிர்விக்கும் நீரோடை
கொஞ்சம் கொஞ்சமாக சூடேறுகிறது

நிழல் கருப்பெனினும்
வண்ணத்தைக் கொட்டுகிறது
பூக்கள் உதிர்க்கும் மரம்



சா.கா.பாரதி ராஜா,
செங்கல்பட்டு.
9944315732

# பெரிய கோவில் !

அதிசயமும் அசந்துப்
பார்க்கும் அற்புதம்...!!!!!

ஆங்கிலேயனும் தலை
சுற்றிப்போன ஆச்சரியம்...!!

இவ்வுலகே வியந்த
தமிழின் கலாச்சாரம்...!!

ஈசனால் உயிர் பெறும்
உயிர் ஓவியம்...!!

உன்கோபுர நிழல்படவில்லை
இப்பூமியிலே...!!

ஊன்றி நிற்கிறாய்
மக்களின் மனதில்...!!

எதுமில்லை உன்னில்
தொழில்நுட்பம்...!!

ஏடுகளுக்கும் புரியாத
தகவல் நுட்பம்...!!

ஐம்பூதமும் உனை
வணங்குது மண்ணிலே...!!

ஒளிபெறுகிறது நந்தியும்
உன்னாலே...!!

ஓங்கி நிற்கிறது தமிழும்
உன்னிலே...!!

மானிடத்தின் மழைப்பு நீ...!

மாநிலத்தின் தலைப்பு நீ...!

இயற்கையின் வழி வந்த
இறைவனின் அற்புதம்..!!!

செயற்கையும் தொட
நினைக்கும் உன் பாதம்..!!

–
அன்புடன்...
ச.அருள் பிரசாத்,
B.Com, CMA, MDA, DTL,
(GST practitioner)
சிராங்குடி



# அடிவாங்கிய கல்

ஆண்டவனாய் வணங்கப்படுகிறது
சிற்பியின் உழைப்பு

சுற்றும் பம்பரம்
வட்டம் போடும்
சிறுவர் கூட்டம்

அடர்ந்த வனத்தில்
அனைத்துப் பாதைகளும் அத்துபடி
ஆடு மேய்ப்பவனுக்கு

கட்சிகளின் கூட்டணி
எதிர்பார்த்த படியே
தேர்தல் முடிவு

நெற்கதிர்கள் தலைசாய்ந்ததும்
நிமிர்கின்றன
உழவரின் வாழ்க்கை

ஆலமரத் தண்டு
பலத்த காற்றடித்தும் அசையவில்லை
பொந்திலுள்ள ஆந்தை

–

பாக்யபாரதி,
தருமபுரி,



# புத்தகப் பறவையாகு

புத்தகம் படி
உனக்குள்
சிறகுகள் முளைக்கும்
புத்தகப் பறவையாகு
காற்றைக் கிழி
விண்ணை அள
வானவில்லை வளை
முகிலோடு முகவரித்தேடு
நட்சத்திரங்கள் பூ மாரித் தூவும்
பனித்துளிகள்
முத்தமிடும்
கதிரவனோடு கைக்குலுக்கு
நிலவோடு புகைப்படம் எடு
கோல்களோடுச் சுற்று
நீள்வட்டப்பாதையில் சருக்கி விளையாடு
விடிவெள்ளியைக் கையில் ஏந்தி
விண்ணில் உலா வா
புத்தகம் படி
உனக்குள்
சிறகுகள் முளைக்கும்
புத்தகப்பறவையாகு
ஓர் நாள்
வானம் வசப்படும் !

- பெ. விஜயலட்சுமி
காஞ்சிபுரம்



# பல முகங்கள் எனக்கு

ஒவ்வொருவருடைய பார்வையிலும்
ஒவ்வொரு முகம்
எனக்கு

நான் எப்படி
இருக்க வேண்டுமென்று
வினவினேன்
பலபேர் பல முகங்களைக்
கொடுத்து விட்டுப் போனார்கள்

அப்படியும் பல முகங்கள்
எனக்கு தற்சமயம்

நான் நானாகயிருக்கும்
முகத்தை யாராலும்
தர முடியாமற் போக
ஏக்க முகமெனக்கு.



--
ஆனந்தன்,
திருப்பூர்.

# இன்று இறப்பு என்பது....

இறப்பு என்றால் முன்பெல்லாம்

அதிர்ச்சி விவரிக்க முடியாத துயரம். ஆனால் இன்றோ இறப்பு வெறும் தகவலாய் தன்னை தகவமைத்துக் கொண்டது. இறந்தால் இல்லங்களில் கேட்கும் பேரிரைச்சல் இப்பொழுது பேர் அமைதி பெற்றுள்ளதோ என்னவோ.

ஊண் பிரிந்தால் ஊரெல்லாம் செய்தி ஊர்வலம் போகும் இப்போதெல்லாம் அந்த ஊர்வலம் உற்றாருடன் நின்றுவிடுகிறது.

இதுவரை பாகுபாடு காட்டி வந்த இறப்பு இப்போது பதுங்கி வருகிறது. பிரபலங்களின் இறப்பே பிரபலமாகாத போது சாதாரண மனிதனின் இறப்பு சாதனையா செய்துவிடப் போகிறது. இறப்புக்கு முன் ஆறுதல் சொல்லியும் இறப்புக்குப் பின் அரவணைத்த கரங்களும் இன்று கைகழுவி கொண்டு இருக்கின்றன.

இன்று இறப்பு என்பது வெறும் சம்பவமே, சப்தமில்லா சடங்குகளின் பிறப்பிடமே.

–
தர்ஷினி நாகூரான்

# அவள் !

அவள் அதை சொல்லியிருக்கத்தான் வேண்டும்.

என் தனிமைத் தீவுகளிளெல்லாம் என்னை தத்தெடுத்து வாரிக் கொண்டவள்.
ஏதேனுமொரு வேடிக்கை கண்டுவிட்டு, அல்லது
வாய்ப்பை பெற்றுவிட்டு
காத்திருக்காமல் சுழற்றும் அலைபேசிக்கு இன்றுவரை மறுக்காமல் எதிர்முனையில்
சதா ஒலித்திருக்கும் என் குரலுக்கு பதில் நல்குபவள்.

புறக்கணித்த பல இடங்களிளெல்லாம்
எனக்காக நின்று என்னை உறைவித்திருந்தாள்.

வெறுமையாயிருக்கும் நாளைய என் பக்கங்களுக்கும் இன்றே உபரி நினைவுகளை
அளித்திருந்தாள் கவிதைகள் சிலவற்றிற்காய்!

யாருமறியாத அவள் இரகசியங்கள் எனக்குள்மட்டும் கொட்டிவிட்டு பெருமூச்சில்
கடந்திடுவாள்!

முன்பு தொடர்ந்து புறக்கணித்த
என் சொற்களுக்கு இன்று அவள்
மறுதலிக்காமல் ஏற்றுக் கொள்வது தான் அதிசயமாகிப் போனது !

சலிப்பு ஊர்ந்த பொழுதுகளில்,
அபத்தங்களின் தொகுப்புகளில் விடுபட நினைக்கையில்,
ஒன்றிரு வார்த்தைகளில் கிளர்ச்சியாக்குகிறாள் !!

இருந்தும் அவள் அதை சொல்லியிருக்கத்தான் வேண்டும்.., அவள் யாரென்று !
சொல்லாத அவளை எதிலும் ஒப்பிடத் தெரியாமல் குழம்புகிறேன் !



–
கவிமலர் த. சரண்யா,
கொழிஞ்சாம்பாறை,
பாலக்காடு மாவட்டம்.
கேரளா.

# சொல்லியழுகிறது வானம்....

என் விழிப்பானைகள் ரெண்டும்
நிரம்பி வழிகிறது
அன்னையின் பாசத்தால்.
/
சொல்லியழுகிறது வானம்
அதைக்கேட்டு தேற்றுகிறது
நிலம்.
/
மண்ணைப் பார்க்குமேயன்றி
விதைத்த கைகளைக் காணாது
விதைகள்.
/
நான் தொலைந்த போது
இருந்த அடையாளம்
இப்போது என்னிடமில்லை.
/
உயிரை இருத்தி வைப்பதும்
எடுத்துப் போவதும்; அந்தந்த
உயிரின் ஒருபிடிக் காற்று.
/
மகள் வரைந்த நதியில்
மணல் கொள்ளை வாகனங்களாய்
வரிசையில் ஊறும் எறும்புகள்.
/
சுடரில் ஒன்று சூடத்தில் ஒன்று
எரியும் அடுப்பில் ஒன்றென
மாறும் தீயின் தீட்சண்யம்.
/
கொலுசே கொலுசே
உன் சிணுங்கலை நிறுத்து.
மகளின் கொஞ்சல் சிரிப்பை
ரசிக்க விழைகிறது மனம்.
/
மனப்பறவை ஓய்வெடுக்கும்
நேரங்களில் கூட
என் இறகுகளை வேறுமனே
இருக்க விடுவதில்லை.
/
வந்தவழியில் திரும்பிப் போகிறேன்
பயணத்தைத் தொடரமுடியாத
முட்டுச்சந்து.
/
அரசு தரும் விலையில்லா
அரிசியைத் தங்கமெனப்
பதுக்குகிறது எறும்புகள்.
/
ஜன்னலின்
இதயமெனத் துடிக்கிறது
திரைச்சீலை.
/
விழித்தூண்டிலில் விழுந்த
என்னை விரைவில் விடுவித்துவிடு
முடிக்க வேண்டிய வேலை
நிறையயிருக்கிறது எனக்கு.
/
சிரிப்பதற்கு சந்தர்ப்பம்
கிடைக்கும் போது சிரித்துகொள்.
அழுவதற்கு வாய்ப்பு
அமையும் போது
அழுது கொள்ளலாம்.
/
படிக்கும் புத்தகத்தை
முடிக்கும் முன்பு அவசரவேலை.
கதையில் வரும் பாத்திரங்களை
எங்கும் நழுவாதபடி
இறுக்கி வைக்கிறேன் நெஞ்சில்.
/
வெடித்த பருத்தி
ஊரெல்லாம் அலைந்துதிரியும்.

தொழுவத்தின் அருகில்
குவியலாய்க் காணக் கிடக்கும்
சாணம்.
/
கொட்டும் அருவியை
ரசிக்கவில்லை. மீன்பிடிக்கும்
அவசரத்தில் தூண்டில்காரன்.
/
ஒற்றைக் கதவு
அவள் திறக்கையில்
ரெட்டைக் கதவானது.
/
அவ்வளவு பெரியமலை
அரைமணி நேரம்கூட தலையில்
தாங்கிப் பிடிக்கவில்லை
அந்திச்சூரியனை...!
/
நண்பர்கள்
எல்லோரும் சொல்லிப்பிரிய,
அவள் மட்டும் பார்வையால்
என்னைக் கிள்ளிப்பிரிகிறாள்.
/
மேகமாக வருவாயெனில்
நான் வானமாகவே
இருந்து கொள்கிறேன்...!
/
நேருக்கு நேர் நின்று
முகம் பார்க்கும்
நிலைக்கண்ணாடியில்
நீ இருக்கிறாய் இல்லை நான்.
/
இரு இதயங்கள்
சங்கமிக்கும் நேரங்களில்
அன்பை வெளிப்படுத்த
மௌனம் போதுமானது.
/
வெட்டி முறித்த
மரக் கிளையின்
பரிதாப அலறல் கடைசியாய்
மண்ணைத் தொட்ட
தளிரிலும் எதிரொலிக்கிறது.
/
ஒரு பிஞ்சு பறவை
சிறகடிப்பதைக் கண்டு
சிறகடிக்கிறது என் மனதும்.
/
என் மீது பார்வை
ஒளி வெள்ளத்தைப் பீய்ச்சுகிறாய்.
என் இதயம் இலயிக்கும்
ஒலிக் கற்றைகளை
எப்போது வீசப் போகிறாய்...?
/
என் கைகளை
இறுகப் பற்றிக் கொள்
என்னைத் தொலைத்தது போல்
உன்னையும் தொலைத்து
விடப் போகிறேன்.
/
காதல் தீ மூட்டி விழிகளால்
என்னைச் சமைக்கிறாய்.
குழையாமல் பக்குவமாய்
வெந்து முடித்திருக்கிறேன்.
சூடாறும் முன்பு ருசியோடு
என்னைப் பரிமாறிக் கொள்.
/
வானத்தை கூடாக்கிய
மேகங்கள்; மழையான நாளில்
தன் தேடலை இனிதே
தொடங்குகிறது பூமியில்.
/
காலத்தின் பிடி
ஒருவருக்கும் தேவைப்படாமல்
போகலாம்; எனினும்
ஒருவரையும் மிச்சம் வைக்காமல்

அனைவரையும்
தன் பிடிக்குள் வைத்திருக்கிறது
காலம்.
/
இன்பத்திலும் துன்பத்திலும்
அழ மட்டுமே செய்கிறது
மழை.
/
வனம் நுழையாதது
காற்றுமல்ல;
நீர்த் தேடாதது
வேருமல்ல;
ஆகாயம் நோக்காதது
தீயுமல்ல;
கீழே விழாதது
அருவியுமல்ல;
வெள்ளம் ஓடாதது
நதியுமல்ல;
விழுந்தால் எழாதது
விதையுமல்ல;
இரவு பகல் காணாதது
பூமியுமல்ல;
பட்டாலும் திருந்தாதவன்
மனிதனல்ல...!
/
துரோகங்களை
மறக்க நினைக்கும்
ஒருவன்; தீரா
அத்துயரங்களை
ஓடும் நீரில் எழுதுகிறான்.
/
பத்துப் பிறைகள்
முதுகில் முகம்பதிக்க
ஆரத் தழுவுகிறாள்.
முத்து முத்தாய் வடிகிறது
என் முதுகில் ரத்தப்பால்.
/
அள்ளிய ஆற்றுநீரில்
அவள் அப்படியே
கொண்டு வந்திருக்கிறாள்
பிறை நிலாவை.
நெற்றியில்
திலகமிட்டுக் கொள்ள!
நானோ அக்கரைக்குச்
செல்ல வேண்டிய
அவசரத்தில்
கையில் துடுப்போடு
வந்திருக்கிறேன்.
/
உருண்டு திரண்டிருக்கிறது
புற்களின் நுனியில்
பனித்துளிகள்.
புல்லை அசைக்கிறது
மென்காற்று.
புல்லின் உடலில் வழிகிறது
பனித்துளியின் வெண்குருதி.

- கவிதைகள் ஆக்கம்,
பாரியன்பன்,
குடியாத்தம் - 632602



# சுய ஒழுக்கத்தின் பத்து விதிகள்...



இளவரசி இளங்கோவன்

அண்மையில் கனடா மொன்றியல் ஐ தமிழ் வானொலியில் வெள்ளி தோறும் ஒலிபரப்பாகும் முத்துக்கள் ஒன்பது நிகழ்வின் வாசிப்பை நேசிப்போம் பகுதிக்காக ஓர் எழுத்தாளரை பற்றி தேடியபோது அறிய கிடைத்தவர் தான் புகழ்பெற்ற அமெரிக்க எழுத்தாளர் நெப்போலியன் கில்.

சுய ஒழுக்கம் என்றாலே சுயகட்டுப்பாடு என்று தான் இன்று வரை நம்மில் பெரும்பாலானோர் பொருள் கொள்கிறோம். ஆனால் சுய ஒழுக்கத்தின் ஒரு பகுதி தான் சுயகட்டுப்பாடு என்பது வியப்பளிக்கிறது. இதை தவிர பிற விடயங்கள் யாவை என்பதனை தான் ‘வெற்றி அறிவியலின் தந்தை’ என்று போற்றப்படும் நெப்போலியன் கில் தனது பின்வரும் விதிகளில் தெளிவாக விளக்குகிறார்.

என்னை பெரிதும் விடயங்கள் ஈர்த்த விடயங்களை, நீங்களும் தெரிந்துகொள்ள இங்கே பகிர்ந்து கொள்கிறேன்.

சுய ஒழுக்கத்தின் பத்து விதிகள்:

1. Keep cool when other people get hot.

கோபமிருக்கும் இடத்தில் நீங்கள் கோபமில்லாமல் இருங்கள்.

வேறொன்றுமில்லை நமது திருக்குறளில் ஆசான் திருவள்ளுவர் வெகுளாமை என்னும் அதிகாரத்தையே கோபம் கொள்ளாமை பற்றி அருளியிருக்கிறார் .

உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்

உள்ளான் வெகுளி எனின்.

உள்ளத்துள் கோபம் கொள்ள ஒருபோதும் எண்ணாதவன், தான் நினைத்ததை எல்லாம் உடனே அடைவான்.

2. There are 3 sides to all argument: Your side, the other person's side and then there's the right side

ஒவ்வொரு வாதத்திற்கும் மூன்று பக்கங்கள் இருப்பதாக நம்புங்கள். நம் தரப்பு சரி, எதிர்தரப்பு தவறு என்று எப்போதும் இருபக்கங்களையே முன்வைக்காமல் மூன்றாம் தரப்பிலிருந்து அணுகி அனைவருக்கும் ஏற்ற நல்லதொரு முடிவை பெறமுடியும்.

3. Never give orders to subordinates when you're angry

நீங்கள் கோபமாக இருக்கும்போது உங்களுக்கு கீழ்உள்ளவர்களுக்கு ஒருபோதும் உத்தரவுகளை கொடுக்காதீர்கள். கோபத்தில் எடுக்கும் முடிவோ, செய்யும் செயலோ வெற்றியை தராது என்பது மட்டுமல்ல மோசமான விளைவுகளையும் கொடுக்கும். குறிப்பாக தனது அதிகாரத்திற்கு உட்பட்டவர்களுக்கு மிகுந்த துன்பங்களை கொடுத்து உங்கள் ஆளுமையையும் மதிப்பையும் குறைத்து எல்லா வகையிலும் பாதிப்பை கொடுக்கும்.

4. Treat all people as if they were rich relatives from whom you expect to inherit some thing at their death

எல்லோரையும் ஒரு பணக்கார உறவினர் போல நடத்துங்கள், அவர்கள் உங்களுக்கு மதிப்புமிக்க சொத்துக்களை விட்டுசென்றால் எப்படி நடந்து கொள்வீர்களோ அப்படியே அவர்களை நடத்துங்கள். நீங்களும் நடந்து கொள்ளுங்கள்.

5. In any unpleasant circumstance look for a seed of equivalent benefit

நீங்கள் ஒரு விரும்பத்தகாத சூழ்நிலையில் இருப்பதை உணர்ந்தால், உடனடியாக அந்த அனுபவத்திற்குள் உங்களுக்கு கிடைக்கும்  நன்மையையும் பாடத்தையும், அனுபவத்தையும் அறிய,தேட தொடங்குங்கள்.

6. Learn the art of asking questions and then listening to the answers

கேள்விகளைக் கேட்பதோடல்லாமல் கவனமாக அதற்குறிய பதிலையும் கேளுங்கள். நீங்கள் ஒரு கருத்துடன் உடன்படவில்லை எனில், “ஏன் இப்படி சொல்கிறீர்கள், எப்படி தெரியும்? என்ன காரணம்?“ என்ற சொற்றொடரைப் பயன்படுத்துங்கள்.

7. Never say or do anything before asking yourself this question , would it benefit or hurt the other person?

நாம் சொல்லும் சொல் அல்லது செய்யும் செயல் யாருக்காவது நன்மை பயக்குமா அல்லது காயப்படுத்துமா என்று நினைப்பதற்கு முன் எதையும் சொல்லவோ செய்யவோ வேண்டாம். மற்றவர்களை காயப்படுத்துவதைத் தவிர்ப்பதே முக்கிய

குறிக்கோளாக கொள்ளுங்கள்.

8. Learn the difference between a friendly analysis and unfriendly critics

நட்பு பகுப்பாய்விற்கும் நட்பற்ற விமர்சனங்களுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கற்றுக்கொள்ளுங்கள். நட்புடன் உங்கள் நலங்கருதி சொல்லப்படும் கருத்துக்களை விமர்சனங்களை கண்டறிந்து உள்வாங்கி மாற்றம் செய்யுங்கள். நட்பற்ற விமர்சனங்களை மௌனமாக புன்னகையோடு கடந்து செல்லுங்கள். அதற்கு மாற்று கருத்து சொல்வதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

9. A good leader can take orders as cheerfully as he gives them

ஒரு நல்ல தலைவருக்கு தனக்கு கொடுக்கப்படும் வேலைகளை,கட்டளைகளை மகிழ்ச்சியுடன் ஏற்க தெரியும். வேலை கொடுக்கப்படும்போது உங்களுக்குள் ஏற்படும் மகிழ்ச்சி போலவே உங்களுக்கு வேலை கொடுக்கப்படும் போதும் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்வதன் மூலம் உங்கள் தலைமை பண்பை அறிந்து மேற்கொண்டு முன்னேறுங்கள்.

10. Remember that tolerance in human relations is as important as it is in operation of mechanics

தற்காலத்தில் அருகிவிட்ட பல குணநலன்களில் முக்கியமான ஒன்று சகிப்புத்தன்மை. எப்போதும் உங்கள் சக மனிதர்களிடம் சகிப்புத்தன்மையுடன் இருங்கள். மற்றவர்களிடம் உங்களுக்கு ஏற்றுக்கொள்ள முடியாத கருத்துக்கள் இருக்கலாம். எனினும் அதை போலவே மற்றவர்களுக்கும் உங்களிடம் ஏற்று கொள்ள முடியாத கருத்துக்கள் நிச்சயமாக இருக்கும் என்பதை நம்புங்கள். சகிப்பு தன்மையை வளர்த்துக்கொள்ள முயலுங்கள்.

சமூகத்தில் பெருகி வரும் குற்றங்களுக்கும், அறம் பிறழ்வுக்கும் நம்பிக்கையற்ற தன்மைக்கும் தனிமனித சுய ஒழுக்க குறைபாடும் பெரும்பங்கு வகிக்கிறது. நேரமிருப்பின் நெப்போலியன் கில்லை வாசியுங்கள்.

நம்ம ஊர் வள்ளுவரும் இதைத்தானே "ஒழுக்கமுடைமை" அதிகாரத்தில் கூறியிருக்கிறார்.

நல்ல மனிதனாக வாழ்வதற்கு தனியாக ஒரு நேரம் காலம் என்று எதுவும் இல்லை. சுயஒழுக்கத்தோடு செயல்படுகின்றவர்களிடத்தில் எந்த நேரத்திலும் நல்ல சுற்றமும்,

மகிழ்ச்சியும், அது கொண்டுவரும் நிறைவும் வந்து சேரும். தமிழினத்தின் தனி அடையாளமான அறவாழ்வு வாழ சுயஒழுக்கத்தை அடிமனதில் ஆழ விதைப்போம்.

நன்றி,

இளவரசி இளங்கோவன்,

பரவாக்கோட்டை

---

# வேண்டுதல்

காத்திருப்பின் வெறுமை போக்க
சர்க்கஸ் கூடாரத்தினுள்
நுழைகிறேன்

பரிமளா மதினியின்
முதுகுத் தேமல் போல
சிதறிக் கிடந்தது கூட்டம்

படுதாக்களின் கிழிசல்களில் சூரியன்
எட்டிப் பார்க்கிறான் வித்தைகளை

கரணம் தப்பினால் மரணம் என
அந்தரத்தில் தொங்கும்
ஊஞ்சல்களில்
அனாயசமாக ஆடுகிறார்கள்
லாவகமாக இடம்மாறுகிறார்கள்
ஒரே சாயலுடைய சாகச அழகிகள்

கர்ப்பிணி பெண்ணொருத்தியை
பலகைக்கு முன் நிறுத்தி
கத்தி வீசத் துவங்குகிறான்
மெலிந்த இளைஞன் ஒருவன்

புன்னகைப்பதாக பாவிக்கிறாள்
அவள்

கொள்கைகளை மறந்து
வேண்டுகிறது மனம்
அசம்பாவிதம் ஏதும்
நிகழ்ந்துவிடக் கூடாதென்று

–

செவல்குளம் செல்வராசு



1.
## நீங்கா நினைவில் நீயிருக்க
உன்னை நினைத்தே நான் கிடக்க
தையலும் நூலும் இணைந்திருக்க
இதயம் மட்டும் தனியே தவித்து
கொண்டிருக்கிறது,....!!!!

2.
## விடைபெற்றபின் குடையொன்றை
தந்து செல்கிறாய்
முழுதாய் நனைந்து
கொண்டிருக்கிறேன்
கண்ணீரில்........!!!!

3.
## என் வெளிச்ச
பெருவெளி எங்கும் உங்கள்
நிதர்சனத்தையே காண்கிறேன்....!!!

4.
## குடை தட்டி செல்லும்
மேகங்கள்
எனது கண்ணீரையும்
கொஞ்சம் துடைத்து செல்கிறது....!!!!

–
**ச. இராஜ்குமார்,**
திருப்பத்தூர் மாவட்டம்

# எப்படிக் கொண்டாடுவது ?

தந்தையர் தினத்தைத்
தந்தையில்லாமல்

அன்னையர் தினத்தை
அன்னையில்லாமல்

சகோதரிகள் தினத்தைச்
சகோதரிகளில்லாமல்

சகோதரர்கள் தினத்தைச்
சகோதரர்களில்லாமல்

நண்பர்கள் தினத்தை
நண்பர்களில்லாமல்

பெற்றோர்கள் தினத்தைப்
பெற்றோர்களில்லாமல்

குடும்பத் தினத்தைக்
குடும்பமில்லாமல்

ஒவ்வொருவருக்கும்
ஒவ்வொரு இழப்பு

நினைவுத் தினத்தை
நினைக்கக் கூட யாருமில்லை

எப்படிக் கொண்டாடுவது?

–
**மு.ஜெரோஷா**

# போனதெங்கே ?

பம்புசெட்டு சுற்றும்
பசுமையான வயல்வெளியில்
வண்டுகளின் ரீங்காரம்
ஓயாத அலைகள் போல்
நெற்பூவின் அருகாட
கதிர் பருத்த நெற்கொத்து
வரப்பில் சாய
நைசாக நெல்லைக் கொரிக்கும்
எலிக்கூட்டம்
எலியின் தீஞ்ச வாடைக்கு
ஆசைப்பட்டு அழையா விருந்தாளியாய்
பின்னால் தலைதூக்கி நிற்கும்
மஞ்சள் சாரை

வரப்பிருக்கும் புற்களுக்கு மகுடமாய்
பனித்துளி

பனியை விழுங்க காக்கிகலர் முயலொன்று வருகிறது

நீர் பாய்ந்த பசுமையான வயல்வெளியும், கிராமத்து
வாழ்க்கையும் போனதெங்கே?

என்ற கேள்வியோடு வறண்ட மனதிற்கு ஆறுதல் கூற
வந்தது
மேகத்தின் கண்ணீர்த் துளி!

–

இளங்கவி,
நடுநாட்டுத்தமிழன்,
குடியநல்லூர்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

# இயற்கை என்னும் அட்சயப்பாத்திரம்!

பிரம்மனின்
அதீத களிப்பின்
உச்சத்தின்
எச்சத்தில்
உருகி
இறுகியது
இயற்கை என்னும்
அட்சயப் பாத்திரம்!

அனைத்துயிர்களுக்கும்
பொதுவில் வைக்கப்பட்டது
அட்சயப்பாத்திரம்!

சிற்றறிவு உயிர்களை
மிதித்து
ஐந்தறிவுகளை அழுத்தி
அட்சயப்பாத்திரத்தை
அபகரித்துச் செல்கிறது
சுயநல ஆறாமறிவு!

ஆவேச மதயானை
காலில் சிக்கி
சின்னாபின்னமாகிறது
இயற்கை வயல்வெளி!

பேராசைப் பன்றிகளின்
உச்சகட்ட அகழ்தலில்
உச்சியில்
பொத்தலாகிப் போனது
அட்சயப் பாத்திரம்!
அதனை ஓசோன் ஓட்டை
என்கிறீர்கள்!

நிலவளசுரண்டலின்
விளைவால் விளைந்த
வெற்றிடத்தை
உடலசைத்து
நிரப்புகிறது நிலம்
நிலநடுக்கமென
பதறுகிறது பதர்கள்!

மலையை
மொட்டையடித்து
வங்கிக் கணக்கில்
வழிய விடுகின்றனர்
நிலக்கொள்ளையர்கள்!
நிலம் கோபத்தில்
சரியும் போது
நிலச்சரிவென
பெயர் சூட்டுகிறீர்கள்!

உலகின் குப்பைகளை
கடலில் கொட்டிக்கொண்டே
இருக்கிறீர்கள்
கடல் கோபத்துடன்
திருப்பி தரும்போது
ஆழி பேரலையென
அலைமோதுகிறீர்கள்!

அட்சயப் பாத்திரத்தை
தொலைத்துவிட்டு
பிச்சைப்பாத்திரத்துடன்
அண்ணாந்துப் பார்த்து
கடவுளிடம்
கையேந்தி நிற்கிறீர்கள்
செம்பிழம்பாகிறது வானம்!



– பா.சிவகுமார்

# தோப்பிக்காரன் (சிறுகதை)

போன முறை கலகலப்பாக சென்ற இடத்துக்குத் தான் இந்த முறை தனியாக மறைந்து மறைந்து செல்கிறான் ரிதன்.

அவன் செல்வது யாருக்கும் தெரிய கூடாது. முக்கியமாக வாசனுக்கு தெரிந்து விடவே கூடாது. வாசன் தோட்டத்துக்குத் தான் செல்கிறான். அவனுக்கு தெரியாமல் எப்படி. ஆனால் தெரிய கூடாது. வாசன் பெங்களூரில் இருக்கிறான். உறுதிப்படுத்திக் கொண்டு தான் சத்தியமங்கலம் பேருந்து ஏறினான். சத்தியமங்கலத்துக்கு 12 கிலோ மீட்டர்க்கு முன்பே இருக்கும் சிற்றூரில் இறங்கி அங்கிருந்து கிழக்காக 2 கிலோ மீட்டர் நடந்தால்... வாசனின் தோட்டம்... தோட்டத்தோடு தோட்டமாக பச்சையம் பூசி பள பளவென தன்னை நாலா புறமும் காட்டி ஜொலித்துக் கொண்டிருக்கும்.

நிஜத்தின் பக்கம் நிற்பதை போலவே நிழலின் பக்கமும் சுலபமாக நின்று விடலாம். ஆனால் இரண்டுக்கும் இடையே நிற்பது பறந்து கொண்டிருப்பது போல. அதுவும் பூமியில் பறப்பது கொடுமை. அது வானத்தில் நடப்பது போல. பேருந்தில் ஜன்னல் சூரியனை காற்றாக்கி ரிதனின் முகத்தில் பூசிக் கொண்டிருந்தது.

எதுவோ துரத்திக் கொண்டே இருப்பது போன்று அடிக்கடி திரும்பி பார்க்கிறான். பின்னாலும் அவனே அமர்ந்திருக்கிறான் போன்ற ஆறுதல்.

இந்த இரண்டு நாட்களாகத்தான் பெரிய பெரிய அசைவுகள் மனதுக்குள். இரண்டு நாட்களுக்கு முன் சமீபத்தில் கிடைத்த நண்பன் வாசனின் இதே தோட்டத்துக்கு புது வருஷம் கொண்டாட ரிதனும் கண்ணனும் வந்திருந்தார்கள். ரிதன்... கண்ணன்... வாசன் மூவரும்.. தோட்டத்தில் மரங்களோடும்... வாழைகளோடும்.. வரப்போடும்... கரும்புகளோடும்... கத்திரிகாய்களோடும்... கோழிகளோடும்... சிறு சிறு குஞ்சுகளோடும்... பறவை பட்சிகளோடும்... டிசம்பர் குளிரோடும்... மெய்ம் மறக்க மெஸ்மரிசம் பூமியில் ஒரு வட்ட வடிவ வேகப்பந்தை சுழற்றுவதாக.... மல்லாக்க படுத்து கயிற்றுக் கட்டிலில் கண்ட நினைவுகள் அற்புதம்.

நியூ இயர் கொண்டாட்டத்துக்கு வந்து விட்டு கோப்பை நிரம்பாமல் எங்கனம் இருக்க.

வாசன் பெங்களூரு உசத்தி சரக்கு கொண்டு வந்திருந்தான். வழக்கம் போல முதல் வட்டத்துக்கு தான் ரிதனிடம் முகம் இருந்தது. அடுத்தடுத்து பேச்சு சுவாரஷ்யத்தில் உடல் இருக்குமா என்றே தெரியாது. இரண்டு கிலோ மீட்டர் காரில் பறந்து சென்று வாங்கி வந்த பரோட்டாவும் குருமாவும்.. செம காம்பினேஷன். நின்று விளையாடும் நிலவும் கூட... சற்று தள்ளாடி தள்ளாடி தான் தோட்டம் அலைந்தது.

காருக்குள் அமர்ந்து... தோட்ட வரப்பில் அமர்ந்து..... நிலவொளிக்கும் நிழல் ஒழிக்கும் முற்றத்து வேப்ப மரத்தடியே ஒரு பழுப்பு பல்பு மாட்டி... திகட்ட திகட்ட பேசி... வருடத்தின் கடைசி நாளை வகை வகையாய் வாட்டி எடுத்தார்கள். வானம் நடுவே வானத்திலிருந்து பொத்துக் கொண்டு பூத்தது போல... பச்சைய வட்டம் பொதுவாக அவர்களை சுற்றி மேலெழுந்து கொண்டே இருந்தது. பரோட்டாவும்.. ஆம்லெட்டும்.... மிக்சரும்... சிப்ஸ்ம் போத்தலை முடித்திருந்தது. இரவும் நிலவும்.. இசையும் ராஜாவுமென அவர்களின் இரவு... யானையாய் தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தது.

தோட்டத்தை ஒற்றை ஆளாக கவனித்துக் கொள்ளும் நேசன் தாத்தா.....நீண்டு வளர்த்த வெள்ளை தாடியில்... வெண்மையும் தன்மையும் படர்ந்து இருக்க...பேச ஒரு நிமிடம் யோசிப்பார். பேசி விட்டு இன்னொரு நிமிடமும் யோசிப்பார். அத்தனை தனிமை விரும்பி. பேச விரும்பாத பெரிய நெற்றிக்காரர்.

கடலை உரித்துக் கொடுத்தார். ஒரு பெக் ஊற்றிக் கொடுத்ததற்கு மூவரையும் கூர்ந்து பார்த்து விட்டு திரும்பிக் கொண்டார். கண்ணன் எடுத்து மடக்கி விட்டான். டிசம்பர் இரவு மனதுக்கு குதூகலமானது. அதுவும் உள்ளே உசத்தி சரக்கு போயிருக்கும் நல்லதொரு வேளையில் திரும்பும் பக்கமெல்லாம் நம்பிக்கை தான். ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம். குடித்து கொண்டாடுவது ஒன்றும் நாம் கண்டு பிடிக்கவில்லையே. அது தொன்று தொட்டு வரும் பழக்கம் தானேடா நண்பா என்ற போது போத்தலைப் போட்டு தாண்டி சத்தியம் செய்தார்கள்...மற்ற இருவரும்.

விசுக்கென ஐந்தடி மரத்தில் கிளைக்குள்ளிருந்து தலையை மட்டும் ரெண்டு இஞ்ச் வெளியே நீட்டி எட்டிப் பார்த்த சேவல்... "போங்கடா பொச கெட்ட பசங்களா....!" என்பது போல விருட்டென்று மீண்டும் தலையை உள்ளிழுத்து கொண்டது.

இரவு 12 ஐ மூன்றாக பிரித்து மேய்ந்தார்கள்.

கொண்டாட்ட குலவைகள் வானத்தில்... தூரத்தில்... பட்டாசுகளாக சிதறின. குளுமையின் நடுக்கமும்... சொல்லொணா இன்பத்தின் பெருக்கமும் அப்பாடா என்றிருந்தது. ஆளுக்கொரு கயிற்றுக் கட்டிலில் படுத்தார்கள். முதலில் தாத்தா. பிறகு வாசன் பிறகு கண்ணன். கடைசியாக ரிதன். ரிதனைத் தாண்டிய இருட்டில் வாழை மரங்கள் இருளை தின்று கொண்டிருந்தன.

கணத்தில் தோன்றியது. வாழை மரங்களா கரும்பச்சை யானை மரங்களா.

குடித்த இரவில் தூக்கத்துக்கும் போதைக்குமான இடையில் நினைப்பு கற்பனையாக

அல்லது கனவாக கூட மாறி விடும். வடிவமற்ற காட்சிக்குள் நிறம் பூத்துக் கொண்டு நில்லாமல் ஓடும் காக்கையின் அலகு திரும்பலில் கண்டதாக நினைவு. பட படவென விழித்துக் கொண்டே... பாதி மலை ஏறிக் கொண்டிருந்தான் கண்ணன். வாசனுக்கு முதலில் குறட்டை தான் வந்தது. பிறகு தான் தூக்கம். பசித்த மானுடத்தின் வழியே தூக்கத்தை உடல் தளர படுத்தபடியே கிடைத்த வெளிச்சத்தில் வயிறை பெரும்பாறைகளில் ஏற்றி இறக்கிக் கொண்டிருந்தார்கள் அவர்கள்.

கண் நிறைந்து எழுந்தமர்த்து நீர் குடித்தான் ரிதன். குளிரிலும் தாகம். தண்ணீர் போத்தலுக்குள் இருந்து தொண்டை நிறையும் சப்தம்... குபுக் குபுக் என.

“ஏன்......தூக்கம் வரலயா...?"

கேட்டது கண்ணனா.... அல்லது கண்ணன் குரலில் அந்த தாத்தாவா.

தோட்டத்துள் சுழன்றடித்த காற்று ஒரு கணம் காலை தொட்டு கட்டிலுக்கடியே புகுந்து அனத்தியது போலிருந்தது. ரிதன் காற்றை கட்டிப் பிடித்தவன் போல கட்டிலில் சரிந்தான். காற்றின் ஒலி.... தாத்தாவின் பேச்சு... இருளின் துளி... எல்லாம் கேட்டாலும் கண்கள் திறக்க முடியாத இறுக்கம்.. சரக்கின் வழியே ரிதனுள் நிறைந்திருந்தது. இமை அழுந்த நெற்றியின் கீழ் பகுதியில் போதையின் இறுக்கம். இந்தா இப்போ அந்த வளைவில் தூக்கத்தை பிடித்து விடலாம்... என ஆழமாய் நினைவூட்டும் போதே... வளைவு தொடர்ந்து வளைந்து கொண்டே இருக்க ரிதன் தேடும் நேர்கோடு கிடைக்க மாட்டேன் என்றது.

ஓர் அனல் சட்டென்று ரிதனின் அருகே சூழ உணர்ந்தான்.

அவன் தொடையோடு ஒட்டியது போல யாரோ அமர்ந்திருந்த சூடு அந்த இரவு குளிருக்கு நன்றாக இருந்தது போல. நன்றாக கால்களை குறுக்கி அந்த முதுகொட்டி சரிந்து கொண்டான். இன்னும் சொல்ல போனால் இடது காலை மடக்கி முதுகில் சற்று சாய்த்துக் கொண்டான் என்றே சொல்லலாம். தூக்கத்தை... இழுத்து... விடும் மூச்சில் அசையாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தூங்குபவனுக்கு உண்டு.

இன்னுமே நெருங்கினான். அனிச்சையா.... குளிருக்கு சுருண்டு கொள்ளும் இச்சையா... காலொட்டி படுத்தது. வளைவுகளில் மூச்சு திணறி விழித்துக் கொள்வதைப் போல..... ஓர் அடுத்த லேயர் விழிப்பு நிலை.

"என்னாச்சாம்... கண்ணனுக்கு..? இப்படி உக்காந்து இருட்டை வேடிக்கை பார்த்துட்டு இருக்கான். ஒண்ணுக்கு எந்திரிச்சிருப்பான். அப்டியே தூக்கம் வராம காத்து

வாங்கிட்டு முன்னாலருக்கற கட்டில்லயே உக்காந்துட்டான் போல. இன்னும் நன்றாக குத்துக்காலிட்டு சரிந்த கால்களை முதுகில் சரித்துக் கொண்டான் ரிதன்.

சற்று நேரமா... வெற்று நேரமா தூக்கத்தில் கடப்பது.

குளிருக்கு திரும்பாமல் இருந்தாலும்... ஒரு பழக்கத்துக்கு திரும்புவது தூக்கத்தில் நடக்கும் தானே. ரிதான் மெல்ல திரும்பி கண்ணன் கட்டிலைப் பார்த்து படுத்தான். கண்ணன் கட்டிலில் இருந்து சற்று முன்பு போலவே குறட்டை சத்தம்... ஹாரன் அடித்தது. படக்கென்று நெற்றியைப் பிளந்தது போல... தூக்கம் விட்டகல... கண்கள் தானாக திறந்து கொண்டன. விழித்த கண்களில் பழுத்த மலை போல சரிந்திருந்த கண்ணன் குறட்டையில் தன்னை தானே தாலாட்டிக் கொண்டிருந்தான்.

"ஐயோ... அப்போ இங்க உக்காந்திருக்கறது.....?!!!!" - வேகமாய் திரும்பினான் ரிதன்.

அங்கே யாரும் இல்லை. சூடு குறைந்து குளிர் நிரம்பிய நொடியில். முதுகில் எதுவோ நடுக்கம். சிமிட்டாத முகத்தோடு மெல்ல எழுந்து... எழுந்தவாக்கிலேயே அமர்ந்தான். கட்டிலுக்கு கீழே பக்கவாட்டில் துழாவி நீர் போத்தலை எடுத்து திறந்து மடமடவென குடித்தான். தாகம் தீரவில்லை. கானல் தீர்ந்தது போத்தலுக்குள். இடது பக்கம் குகை போல சாய்ந்து நீண்டிருந்த இருட்டில் இப்போது வாழை மரங்கள் பச்சையும் கருப்பும் பூத்து நிலவொளியை வாங்கி பூசிக் கொண்டிருந்தன. அவசியமாக அலைபேசியை எடுத்து மணியைப் பார்த்தான். மணி நடு இரவு 3.

இன்னும் தான் தூங்கவே இல்லை போல நினைத்தவனுக்கு மணி மூன்றானது தூக்கத்தைக் கடந்த... காலத்தை கண் முன் காட்டியது.

எழுந்து நின்றான். வாழை மரம் வா என்றது போல இருந்தது. இருட்டில் எல்லாமே போல தான் போல. அருகே சென்று பார்த்தான். பார்ப்பதற்கும் பார்த்தற்கும் இடையே பார்த்த மறதி. குடித்த விதி. மெல்ல நகர்ந்து சேவல் மரத்தடியே நின்றான். குளிர் தரை இறங்கிக் கொண்டிருந்தது. மேலே சரேலென சரிந்து அகலமாய் விரியும்.. தென்னை மரம். அதையொட்டி இனிக்க காத்துக் கிடக்கும் கரும்புக்காடு. இந்தப் பக்கம் வட்ட யானையாக வெள்ளை பூசிய வயிறு தள்ளிய வட்ட கிணறு.

முற்றம் ஒட்டி சுற்றி சுற்றி.. அந்த காட்டை சுற்றியதாக கண்களை சுழற்றி வானம் பார்த்தான். பட்டென்று எதுவோ எதிலிருந்தோ தோன்றி மறைந்தது போல பளிச்சிட்டது... நிலவொளியில் வானவில் கோடிழுத்தது. நிலவை கண்கள் கூச பார்த்தான். நிலவும் கண்கள் கூச பார்த்து விட்டு... படக்கென்று உள்ளே சென்று கதவடைத்தது போன்ற பிரமை. அடைத்த கதவுக்குள் மறைந்து கொண்டு யாரோ தன்னை கவனிப்பதாக ஒரு

அவதானிப்பு. நிலவில் இருந்து கார்ட்டூன் குதிப்புகள் நிகழ்வதாக குழம்பிய பின் மண்டையில் சுமை ஏறிக் கொண்டேயிருந்தது. அப்படியே யாரோ அவனை கைத்தாங்கலாக கூட்டி வந்து கட்டிலில் போட்டது போல் நம்பினான். குடித்த இரவில் தூக்கத்தில் விழும் முன் வரும் நம்பிக்கை அது.

"ரிதன்... எந்திரிடா..." குப்பறவும் இல்லாமல் மல்லாக்காவும் இல்லாமல் குறுக்காக படுத்திருந்தவன் தோள் பட்டையைத் தட்டி தட்டி எழுப்பினான் கண்ணன்.

எந்த நொடி முழிப்பு வந்தது என்று தெரியவில்லை. ஆனால் அந்த நொடி விழித்திருந்தான். எழுந்தமர்ந்து சூனியத்தை வெறித்தவன்.... அமைதியாக இருந்தான்.

"வாசா.... இங்க என்னமோ சரி இல்லடா" என்றான். அவன் குரலே வேறொரு குரல் போல கேட்டது.

உசத்தி சரக்கின் மிச்சம் புது வருடத்திலும் இட்லிக்கு இணைந்திருந்தது. தாத்தா இட்லி எடுத்தெடுத்து ஒவ்வொரு தட்டிலும் பார்த்து பார்த்து வைத்துக் கொண்டிருந்தார். கண்ணன் வழக்கம் போல இன்னொரு இட்லி என்றான். என்னமோ சரி இல்லையை யாரும் கண்டு கொண்டதாக தெரியவில்லை. வழக்கம் போல கதை விடுகிறான் என்பது அவர்களின் இட்லிக்கு சுவை கூட்டியது.

இரவில் பார்த்த இடங்கள் பகலில் வேறு ஆடை அணிந்து கொண்டு வேற்றுலகை கொண்டு வந்து வேடிக்கை காட்டுவதை ஆழ்மனம் நம்பினாலும்... அப்படியென்றால் யார் முதுகில் என் கால் சாய்ந்திருந்தது. அந்த சூடு இன்னமும் உணர முடிகிறதே. நான்காவதாக ஒரு மூச்சு சப்தம்... நான்காவதாக ஒரு இருத்தல்... நான்காவதாக ஒரு அசைவு. இரவின் விஸ்தீரத்தில்.... இன்னொரு ஜோடி கால்களை நான் உணர்ந்தது கற்பனையா. செங்கழுத்தை கிளை நடுவே வெளியே நீட்டி பார்த்து விட்டு உள்ளிழுத்துக் கொண்ட சேவல் முகம் சட்டென வந்து போனது. எழுந்து சேவல் இருக்கும் இடத்தை நோட்டமிட்டான். அவனை ஒரு முறை திரும்பி பார்த்து விட்டு.... ரகசியங்கள் காக்கப்பட வேண்டும் என்று ஜாடையில் சொல்வது போல... கொக்கு நடையில் வாசலில் கோலம் போட்டபடியே சோளம் மேய்ந்து கொண்டிருந்தது.

"இல்ல வாசா.. கண்டிப்பா... இங்க வேற யாரோ இருந்தாங்க... எனக்கு பீல் ஆச்சு..." நெற்றி நீவிக் கொண்டே சொன்னான் ரிதன்.

"என்ன தாத்தா... நான் இல்லாதப்போ யாரையாவது கூட்டிட்டு வந்து வெச்சிருக்கியா..." முதல் தோசையை முடித்த வாசன் வாய் வம்பிழுத்தது.

இப்போது தோசை சுட்டுக் கொண்டிருந்த தாத்தா ஒருமுறை முகத்தை தூக்கி வாசனைப் பார்த்து விட்டு மீண்டும் குனிந்து வேலையைத் தொடர்ந்தார். தோசையில் எழும் ஓட்டைகள் எதையோ பொத்துக் கொண்டு சொல்வது போல இருந்தது.

தாத்தாவை நக்கல் அடித்துக் கொண்டே ரிதனைப் பார்த்த வாசன்..." இல்லடா ரிதன்... எனக்கு தெரியாம இங்க யார் இருப்பா சொல்லு... சுத்தியும் பென்சிங் போட்ருக்கு. யாரும் வர முடியாதுடா. இது தோட்டம். இங்க நேசன் தாத்தாவை தவிர வேற யாருமே இல்லடா. பெங்களூரு உசத்தி சரக்கு உன்ன உசுப்பேத்தி இருக்கு... சரி கிளம்போவோமா" என்றான்.

"ஆமாமா" என்ற கண்ணன் கடைசி தோசையை முடித்துக் கொண்டிருந்தான்.

எதையோ விட்டு விட்டு கிளம்புவது போல இருந்தது.

வீடு வந்த பிறகும் தோட்டத்தின் சுவடுகள் ரிதனை பின் தொடர்வதை அவனால் உணர முடிந்தது.

அவன் திரும்ப வந்து விட்டான்.

இம்முறை கண்ணனும் இல்லை. தோட்டத்துக்கு சொந்தக்காரன் வாசனும் இல்லை. அந்த கிழவனுக்கும் தெரியாமல் தோட்டம் நுழைகையில்.. பூமி விட்டு வெளியேறியது போன்ற உணர்வு. அதே நிலவு. ஆனால் வேற இரவு. அவன் சருகுகள் மேல் கால் படாமல் பூமிக்கு மேல் நடப்பது போல ஒரு காட்டு பூனையாய் நடந்தான். பாதங்களுக்கு கீழே பூமி நழுவுவது போலிருந்தது.

ஜனவரி குளிர் உடல் துளைத்துக் கொண்டிருந்தது. பனி விழுந்த தோட்டத்தில்.. பச்சை இலைகளின் முதுகில் இரவுத் துளிகளின் தஞ்சம். நுரையீரல் நிறைக்கும் குளிர்ந்த காற்றில் ஊசி குத்தும் நெருப்பு. அடிக்கடி வந்த பெருமூச்சை ஆழ்ந்து அளந்து நிறுத்தி நிதானமாக குறு மூச்சாக்கி விட்டான். நேரம் காலம் பார்க்காத இரவு அந்த தோட்டத்தை சுற்றிலும் தன் மாய கைகளை பரப்பி மூடி இருந்தது. வாசலில் கயிற்று கட்டிலில் ஒரு பிணம் போல கிடந்தான் கிழவன். முகப்பு லைட் மட்டும் முணுக் முணுக் என மூச்சு வீட்டுக் கொண்டிருந்தது.

"லைட்டை கண்டு பிடிச்சு இருட்டை கொளுத்திட்டானுங்க.... பைத்தியக்கார பயலுக" என்று போன முறை வந்த போது கிழவன் முனங்கியது நினைவுக்கு வந்தது. அவன் ஒரு இருட்டு விரும்பி என்று வாசன் கூட சொல்லி இருக்கிறான்.

ரிதன் பக்கவாட்டில் நுழைந்து பதுங்கி பதுங்கி வாழைத் தோப்புக்குள் சென்று விட்டான். வரைந்து வரைந்து சென்ற வாழைத் தோப்புக்குள் நிலவொளி நில்லாமல் உதிர்ந்து கொண்டிருந்தது. வானம் வீசி எறிந்த வெளிச்ச துகள்களில் குளிர் சேர்ந்த இரவுக்கு நாணமும் சேர்ந்திருந்தது.

வரப்பு தாண்டி... நெடு நெடுவென வளர்ந்து வந்த வேகத்தில் தலை விரித்து இலை பரப்பி நின்ற வேப்ப மரத்தடியே பளபளவென எதுவோ அசைவதைக் கண்டான். உள்ளே சுளீர் என்று எதுவோ வலித்தது. இதய துடிப்பு வேகமெடுக்க... சட்டென்று கிணற்று சுவர் மறைவில் பதுங்கினான். சமயோசிதம் சாமத்தில் தத்ரூபமாக வேலை செய்யும்.

எங்கிருந்தோ சுழன்றடிக்கும் காற்று விசு விசுவென ஸ்ஸ்ஸ்ஸ் என்று அடித்தொண்டையிலிருந்து சப்தமிட்டபடியே அந்த வேப்ப மரத்தை சுழல... கீழே அமர்ந்திருந்த அந்த உருவத்தின் கூந்தல் காற்றில் ஜிவ்வென்று அசைந்தாடியது. நிலவுள்ள இரவில் கூந்தலின் நிறம் பொன்னிறம். அவன் கூர்ந்து கவனித்தான். நடுக்காட்டில் யாரோ ஓவியம் வரைந்து வைத்து விட்டு போனது போன்ற கலை மனம் நொடியில் வந்து கலைந்தது. எதற்கோ திரும்பியது உருவம். அவனுக்கு திரும்பியது போல அசைந்துதிர்ந்தான். கண்களில் பிரபஞ்ச வெளிச்சம். பேரழகில் வடிவம். முகத்தில் கண்ட கனிவு. கனவுக்குள் இருந்து எட்டி பார்த்த ஜன்னலில் தெரியும் முகம் போல அத்தனை பளிச்,. மழைக்குள் நெளியும் மாய பிம்பம் அதில்.

அவன் எப்போது நகர்ந்து முன்னேறினான் என்று தெரியவில்லை. எல்லாமே அனிச்சையாய் நடந்து கொண்டிருந்தது. அவள் அவனை ஆழமாய் பார்த்தாள். பார்த்துக் கொண்டே இருந்தாள். அவள் கண்களில் சுடர். அவள் கன்னத்தில் மினுமினுப்பு. காதுகளில் பரிபூரணம். நாசியில் நளினம். கொண்ட வெம்மை... கழுத்தொட்டி தொங்கும் இரட்டை கிளவி.

அவன் நொடியில் மண்டியிட்டு அமர்ந்தான். பூமி சுழல்வதை நிறுத்திய நொடியெலாம் இப்படித்தான் இருக்கும். கொடியில் பூத்த மனம் பயம் அற்றது. தான் அற்றது. ஒருவேளை வானத்தில் இருந்து இறங்கி வந்த தேவதையோ. அவனை மார்போடு அணைத்துக் கொண்ட அவளிடமிருந்து செந்தூர பூக்களின் வாசம். அந்த இடமே ஒரு மாயத்தில் நிகழ்ந்து கொண்டிருப்பதாக பட்டது. இருவரும் அணைந்திருந்தார்கள். இருளுள் இசைபட எரிந்து கொண்டிருந்தது நிலா.

எங்கோ விட்டது இங்கே தொடர்வது போல இருந்தது. கிணற்று மேட்டில் அமர்ந்திருந்தார்கள். அவள் மொழியற்ற முன்பிறவி போல இருந்தாள். தங்கத்தில் செய்த உடலைப் போல.. மென் சதையில் வன தோல்கள். ஒவ்வொரு அசைவுக்கும்...

இன்பத்தின் பரவசம் கூடிக் கொண்டே போனது.

வரப்பினோரம் மடி மீது படுத்துக் கொண்ட போது... மாடி வீட்டில் தான் நிலவிருக்கிறது போல. அதுவும் இரட்டை நிலவு. கன்னம் கிள்ளி வாய்க்குள் போட்டாள். முகத்தை முகத்தால் வருடினாள். யுகத்தை கடந்து வந்திருக்க வேண்டும் அவள் மூச்சு. அனல் பரப்பும் ஆதி வயிற்றில் காதல் நிரம்பியது.

கிழவன் கத்தியை கெட்டியாக பிடித்தபடி வெறி பிடித்த அரக்கனாக.....தாடி நடுங்க தோப்புக்குள் அங்கும் இங்கும் அலைந்தான். அவனோடு இரு நாய்களும் பற்களை திறந்து கொண்டு பாவ் பாவ் என கத்தியபடி பேய்களை போல அலைந்தன. அவன் அவளின் கையை இறுக பற்றியபடி தோட்ட முகப்பிலிருக்கும் சிறு கடவுள் சிலையின் பின்னால் குனிந்து மறைந்திருந்தான்.

"யார் நீ... இங்க எப்டி வந்து மாட்டின..." காதோரம் கிசுகிசுத்தான்.

அவளுக்கு பேச குரல் எழும்பவில்லை. ஜாடை காட்டவும் உடல் விளம்பவில்லை. நடுங்கிய உடல்...அவன் கையை இன்னும் இறுக பற்றிக் கொண்டு பார்த்தது.

அந்த தோப்பே ஒரு மர்ம விலாசம் போல ஒளி வாங்கி கிடந்தது. அடிக்கும் காற்றும்... குளிரின் போக்கும் எது நிஜம்.. எது நிழல் என்று மறக்கடித்துக் கொண்டிருந்தது.

முகப்பில் கேட்டை எட்டிப் பார்த்துக் கொண்டே கிழவன் கரகரத்த குரலில் பேசியது நன்றாக கேட்டது.

" வாசா... உன் பிரெண்ட்க்கு எல்லாமே தெரிஞ்சிடுச்சு. அட அவன்தாண்டா... அந்த தொப்பிக்காரன். உன் தங்கச்சிய கூட்டிட்டு தப்பிக்க பாக்கறான். விஷயம் வெளிய போச்சுன்னா,... நீ நான் இந்த தோட்டம்... எல்லாம் காலி. தோட்டத்தை தோண்டுனா... அவ காதலனை கொன்னு புதைச்சது வெளிய வந்துரும். குடிச்சிட்டு கூத்தடிக்காதன்னு சொன்னா கேக்கறியா வாசா... மோசம் போய்ட்டா நாண்டுக்கிட்டு தான் சாகனும். கவ்ரவ கொலையெல்லாம் கத்தி மேல நடக்கற மாதிரிடா... இப்டி விவரம் கெட்டு மாட்டிக்க கூடாது... கிளம்பி வா. பதறாம வா. எப்படியும் மாட்டிக்குவாங்க...." கிழவனின் பேச்சும் உடல்மொழியும்...ஒரு சாத்தானைப் போல இருந்தது.

ரிதனுக்கு கால்களில் பயம் ஊர்ந்தது.

'வாசா.... இது உன் தங்கச்சியா....!' - சட்டென்று திரும்பி அவளை பார்த்து கண்கள் விரிந்தான்.

அவள் ஆமாம் என்பதை போல தலை ஆட்டினாள். அவள் கண்களில் கணத்தில் கண்ணீர். எத்தன நாளா இங்க அடைச்சு வெச்சிருக்கான்... உன் லவ்வரா கொன்னுட்டாங்களா..?" - கிசுகிசுத்தான். மூச்சு வாங்கியது ரகசிய பேச்சுக்கு. ரிதனுக்கு இதய துடிப்பு அதிகமானது.

“வெண்மை நிறத்தில் ஒரு தேவதையைப் போல அவள் கிடைத்தது நினைவு வந்தது. பிறகு எப்படி இவள் கையைப் பிடித்துக் கொண்டு இந்த தோப்புக்குள் ஓடி கொண்டிருக்கிறோம்" யோசிக்க யோசிக்க ரிதனுக்கு ஒன்றும் புரியவில்லை. இந்த தோட்டத்தில் என்ன நடக்கிறது. தங்கச்சியையே இப்டி அடைச்சு வைப்பானுங்களா... என்ன சாதி கருமம் இது..." ஒன்றும் விளங்காத போதும் அவள் கையை மட்டும் விடவே இல்லை.

முருங்கை மரத்தடியே நின்று பற்களை கடித்தபடி அங்கும் இங்கும் ஓடி ஓடி அலைந்து தேடி கொண்டிருந்த கிழவனும் நாய்களும் பேய்களை போல தெரிந்தார்கள். இருளும் நிலவொளியும் தோட்டத்தில் வன்மத்தை கூட்டி காட்டியது. வந்து வந்து சரிந்து உள் நுழையும் காற்றுக்கு இருள் துழாவ ஆயிரம் கைகள். இன்னும் பத்தடி ஓடி விட்டால் கேட்டை தொட்டு விடலாம். ஆனால் அத்தனை உயர கேட்டை தாண்டி குதிக்க முடியாது... என்ன செய்வது. குத்த வைத்து அமர்ந்தபடியே அங்கும் இங்கும் அலை பாய்ந்த கண்களில் செய்வதறியாமல் தடுமாறும் கால்களின் சிமிட்டல். கிழவனை அடித்து சாய்த்து விட முடியுமா என்று கூட ஒரு கணம் யோசித்தான். நாய்களின் உயரம் அந்த எண்ணத்தை சாய்த்தது. கையை கெட்டியாக பிடித்து நடுங்கி கொண்டே உடன் ஒட்டி உட்கார்ந்திருந்தவளின் மூச்சில் அனல் தெறித்தது.

அங்கே சுழலும் பெரும் பயத்தை தாண்டியும்... அவனுள் சில முன் பின் நினைவுகள் அலைபாய்ந்தன.

தோப்புக்குள் ஒரு தேவதையைப் போல பார்த்தது இவளையா. அருகில் குத்த வைத்து அவன் கையை கெட்டியாக பிடித்தபடி அமர்ந்திருந்த அவளை ஒரு கணம் திரும்பி பார்த்தான். இருளடைந்த முகம். வியர்வை பூத்து உப்புதிரும் முகம். குளிக்காத உடல். அழுக்கேறிய ஆடை. உடல். அவள் நறுமணத்தால் பூத்தது போல இருந்தாளே. அப்ப அது கனவா.....இல்ல கற்பனையா... இல்ல என்ன மாதிரி மாயம் இது.

எப்போ இவ கையை பிடிச்சான். எப்போ ஓட ஆரம்பிச்சான்... நினைவுக்கு வர மாட்டேன் என்கிறது ரிதனுக்கு. இரவு நேர இலை மறைகளை நினைக்க நினைக்க எது நிஜம் எது கற்பனை என்று தெரியவில்லை. முன்னுமற்ற பின்னுமற்ற நடுவில் பீறிட்டு எழும் துக்கத்தின் வேகத்தில் நீரோடை தேடியது உஷ்ணம். ரிதனுக்கு தலையை சுற்றிக் கொண்டு வந்தது.

கிழவன் கேட் அருகே ஒரு கிறுக்கனை போல கையில் நீண்ட வாலை பிடித்துக் கொண்டு நின்றான். சிக்கினால் நாய்களுக்கு துண்டாக்கி விடுவான். ஒரு கவ்ரவ கொலைகாரனுக்கான எல்லா தகுதியும் அந்த முகத்தில் இப்போது நன்றாக தெரிந்தது.

பட்டென்று அவளை இழுத்துக் கொண்டு தோப்புக்குள் ஓட ஆரம்பித்தான் ரிதன்.

ஹா ஹா ஹாஹ் என்று தொண்டைக்குள் கொலை வெறி ஏற விரட்டிக் கொண்டு ஓடிய கிழவனை கிழவன் என்றே சொல்ல முடியாது. திடமான கால்களில் திமிரான சாதிப்பற்று.

அவள் கையை விடாமல் பற்றிக் கொண்டே தோட்டத்தின் வரப்பில் ஓடி கரும்புக்காட்டுக்குள் நுழைந்து.... போன முறை வந்தபோது இந்த வழியே வெளியே செல்ல ஒரு சின்ன வழி இருப்பதை வாசன் சொல்லி இருந்தான். நினைவுக்கு வந்த நிமிடத்துக்கு நன்றி சொல்லி அவ்வழியே நுழைய......சில கணங்களில் அவளோடு வெளியேறினான் ரிதன்.

கேட்டில் ஏதோ சத்தம் கேட்டது போல் இருக்க.... தோப்புக்குள் நாயோடு நாயாக விரட்டி சென்ற கிழவன் மூச்சிரைக்க நின்று .... மீண்டும் கேட்டுக்கு ஓடி வந்தான். கேட்ட அருகே வந்த கிழவன்.... மிஸ்கின் பட மொட்டையனை போல அங்கும் இங்கும் ஓடி பார்த்து... எதுவோ சரி இல்லை என்பதாக இன்னும் இன்னும் கூர்ந்து கவனிக்க... அனிச்சையாக அவன் கண்ணில் சிறு தெய்வங்கள் சிலை இருக்கும் இடம் பளீரென பட்டது. நிலவொளியில் சிவப்பு கலந்தது போல... இருளின் குரல் உடைந்திருக்கலாம்.

துணை தெய்வங்கள் சிறு சிறு சிலைகளில் இருக்க நடுவே அமர்ந்திருந்த சிறு தெய்வ சிலையை மட்டும் காணவில்லை. திக்கென்று கண்கள் விரிய நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சரிந்தான் கிழவன். நாய்கள் இரண்டும் ரத்தம் கக்கி சரிந்தன. அந்த தோட்டம் நொடியில் பற்றிக் கொண்டு எரிய ஆரம்பித்தது.

அதிகாலை பேருந்தில்... ஆங்காங்கே சிலர் அமர்ந்திருக்க.... ரிதனின் வலது பக்க தோளில் சரிந்து கண் மூடி இருந்தாள் காப்பாற்றப்பட்ட வாசனின் தங்கை. நிம்மதி அவள் விடும் மூச்சில் ஏறி இறங்கியது. ஒரு வார போராட்டம் அவளை அயற்சியாக்கியிருந்தது.

தோளில் சரிந்திருந்தவளை உற்று பார்த்து விட்டு... மெல்ல புன்னகைத்தபடி "இவளை தான் அப்படி பார்த்ததா நினைச்சுக்கிட்டேனா...... இல்ல அவ வேற யாரோவா..... ஊருக்கு போனதும் முதல் வேலையா போலீசுக்கு போகணும்......" மனதுக்குள் என்னென்னவோ ஓட... அவனும் கண்கள் மூடினான். உடல் நடுக்கம் கொஞ்சம் ஓய்ந்திருந்தது.

மூன்று பேர் அமரும் அந்த இருக்கையில் ரிதனின் இடது பக்கம் அமர்ந்திருந்த... யார் கண்ணுக்கும் தெரியாத அந்த சிறு தெய்வ சிலை மெல்ல அந்த வெண்ணிற தேவதையாய் மாறிக் கொண்டிருந்தது.


முன்னொரு காலத்தில் காதலுக்கு பலியான ஒரு ஜோடிகள் அந்த தோட்டத்தில் புதைக்கப்படும் காட்சி... கண் மூடி சரிந்திருந்த ரிதனின் நினைவில் ஒரு கனவைப் போல தெரிந்து கொண்டிருந்தது. புதைக்கப்படும் ஆணின் வலது கட்டை விரலில் ரிதனுக்கு இருப்பது போன்றே வட்ட மச்சம்.

ரிதனின் இடது தோளில் வெண்ணிற தேவதை சாய்ந்து கொண்டது கூட கனவின் தொடர்ச்சியைப் போலத்தான் இருந்திருக்கும்.

–

கவிஜி

---



**நிரோசா ஸ்டாலின்,**
எட்டாம் வகுப்பு
கூப்பாச்சிக்கோட்டை

# துளிப்பாக்கள்

போதை ஆசாமிக்கு
வேலை கிடைத்தது
டாஸ்மாக்கில்

கள் இறக்கிய பணத்தில்
குவார்ட்டர் அடித்தான்
டாஸ்மாக்கில்

மரத்தின் உச்சியில்
கொட்டிய காற்று
வலியில் உதிரும் சருகுகள்

எரியும் கோபம்
அணைந்து போகிறது
நீரறுந்தும் போது...

அசிங்கத்தை உண்டு
உயிர் வாழ்கிறது
தெருவோர சாக்கடை....

எழுதுகோல் பழகுகிறது வலியில்லை
ஹைக்கூக்களுக்கு

வெயில் தகித்ததால்
மரங்களின் மகப்பேறு
நிழல்

தேர்தல் முடிந்ததும்
அடக்கம் செய்யப்படுகிறது
வாக்குறுதிகள்..

வயிறார சோறுபோட்டவன்
வயிறு காய்கிறது
சமையல்காரன்..

மூடிய வகுப்பறையில்
நுழையும் செடிகள்
கேட்கிறது பாடம்

குருவிகளின்
சங்கீத அழைப்பில்
துள்ளியாடும் நீரோடை

ஆற்றில் குதித்து
தற்கொலை செய்கின்றன
உதிரும் சருகுகள்

நிர்வாண நீரில்
பசியாற்றுகிறது
நீரறுந்தும் பறவை

உதட்டின் ஆசை
நிறைவேறுகிறது
முத்தம்

பசியில் கைகூப்புகிறான்
கோவில் வாசலில்
பிச்சைக்காரன்

காதலியின் கடிதத்தை
பரிசளித்தான் காதலன்
காதலியின் திருமணநாளில்

தொட்டிச்செடியும்
பூக்கிறது
முதிர்கன்னியின் வீட்டில்

மருந்து சாப்பிட
மறந்து விட்டான்
ஞாபக மறதிக்கு...

குழிவெட்டி
சம்பாதிக்கிறான்
வெட்டியான்

– ஞா. முனிராஜ்,
அருப்புக்கோட்டை

# ஒரு மரம் ஒரு நிழல்

–

அவசரமாக பயணிக்கும்
அந்த சாலையின் நடுவே
ஆயாசமாக ஒய்வெடுக்கிறது...
அந்த மரத்தின்
நிழல்!

–

சாலையோரத்தில் இருந்த
மரம் வெட்டப்பட்டு
விறகானது பாதி
பலகையானது பாதி!
எங்கே போயிருக்கும்
அதன் நிழல்..?!

–

அப்படியே பெயர்த்து
இடம் மாற்றி
ஊன்றப்பட்டது
அந்த மரம்...
அதன் நிழலோடு..!

–

மலர்கள்
பூத்து குலுங்குகிறது
மரத்தில்!
அதன் வாசனை
பரவிக் கிடக்கிறது
அதன் நிழலில்..!

–

மரம்
அப்படியே தான்
நிற்கிறது!
அதன் நிழல் தான்
கிழக்கும் மேற்குமாய்
தாவுகிறது..!

–

அசல்
போல் இல்லை
நிழல்!
மாறிக்கொண்டே
இருக்கிறது
முகம்..!

–

நேற்று வெயில்
இன்று நிழல்
நாளை எதுவோ..!

–

மகிழை. சிவகார்த்தி



# 90களின் நம்பிக்கைகள்

*இப்ப இருக்க அவசர இணைய உலகத்துல, 90களில் பிறந்தவங்க அனுபவிச்ச நாட்களை எண்ணிப் பார்த்தா பெரும் வியப்பா இருக்கு...*

*சொல்ல நிறைய விசயம் இருந்தாலும் 90களில் பிறந்தவங்க நம்புன விசயமெல்லாம் இப்ப நினைக்கும்போது அடக்க முடியாத சிரிப்பு தான் வருது.*

*ஒவ்வொன்னா பார்ப்போம்,*

*மயிலிறகு குட்டி*

*பள்ளி பாட புத்தகத்துக்கு நடுவுல ரெண்டு மயிலிறகு வச்சிட்டு எப்படா குட்டி போடும்னு அடிக்கடி திறந்து பார்க்குறது, அப்புறம் சில பேர், அடிக்கடி திறந்து பார்த்தா குட்டி போடாதுனு சொல்லிட்டு மூனு நாளைக்கு ஒரு தடவ பார்க்குறது, இன்னும் ஒரு படி மேல போய் அரிசி போட்டா சாப்பிட்டு நிறைய குட்டி போடும்னு நம்புனதெல்லாம் நினைச்சு பார்க்குறப்ப குபீர் சிரிப்பு!*

*ரப்பர் ஆராய்ச்சி மையம்*

*பென்சில் சீவுன அப்புறம் வர குப்பைய அடுப்புல போட்டு எரிச்சா ரப்பரா ஆவும்னு சொல்லிட்டு உசுரோட இருக்க பென்சிலை சீவுசீவுனு சீவி கடைசில சாம்பலா ஆக்குனது தான் மிச்சம்.*

*ஒத்த கொம்பு*

*யாரு மேலயும் கோபம் இருந்தா போய் ஒரு முட்டு முட்டிட்டு ஒளிஞ்சிக்கலாம், ஏன்னா முட்டு வாங்குனவங்களுக்கு தான் கொம்பு முளைக்கும்! இப்படி தெரிஞ்சும், தெரியாம ஒரு தடவ முட்டிக்கிட்டு, கொம்பு முளைச்சிடும்னு சொல்லி அப்புறம் ஏழெட்டு தடவ முட்டி மண்ட வீங்கிய கதையெல்லாம் சொல்வதற்கு ஒன்றுமில்லை.*

*கல்யாண அரிசி*

*வாய் நமநமனு இருக்கேனு ரெண்டு அரிசிய எடுத்து வாயில போட்டதும், அரிசிய தின்னுட்டியா, அவ்வளவு தான் உன் கல்யாணத்தன்னைக்கு மழை பெய்ய போகுது னு சொல்ற குரல் எங்க இருந்து வருதுனே கண்டுபிடிக்க முடியாது.*

குழந்தை மரம்

இந்த பப்பாளி, ஆரஞ்சு, திராட்சையெல்லாம் தின்றப்ப வாய்க்கு டிமிக்கி கொடுத்துட்டு தொண்டை வழியா சல்லுனு சில விதைகள் உள்ள இறங்கிடும். இத யாருகிட்டயாச்சும் கேட்டா, ஐயயோ, கொட்டைய முழுங்கிட்டியா, போச்சு உன் வயித்துல மரம் முளைக்க போகுதுனு சொல்லி பயமுறுத்தி வச்சிடுவாங்க. இதுல சில குழந்தைக, அவங்களுக்கு பிடிச்ச பழத்தோட மரம் வளர்ந்தா நல்லா இருக்கும்னு சொல்லிட்டு வேணும்னே தின்ன வரலாறும் இருக்கு!

கணிணி காலணியகம்

பள்ளிக்கூடம் கல்லூரிலயெல்லாம் இந்த செப்பல் shoe லா போட்டு உள்ள விட மாட்டாங்க. இப்ப வரைக்கும் அப்படி தான் இருக்குனு நினைக்கிறேன்.

முடி வெட்டுற கடை

முடி வெட்டுற கடைல இருக்க model photos எல்லாத்தையும் பார்த்துட்டு அண்ணன் நமக்கும் அந்த மாதிரி எல்லாம் வெட்டுவாருனு தலைய கொடுத்த காலங்கள் அழகானவை...

முத்த குழந்தைகள்

இரண்டு பேரு முத்தம் கொடுத்தாலே குழந்தை பிறக்கும்னு நம்ப வச்ச உலகம் இது.

இது மாதிரி பல புரளிகளை கடந்து வந்தாலும் இன்னும் சிலவற்றில் அந்த நம்பிக்கைகள் தொடர்ந்து வந்து கொண்டு தான் உள்ளது.

உங்களுக்கு தெரிந்த இது மாதிரியான தருணங்களை திறவுகோல் இதழுடன் பகிர்ந்து பலரின் 90களின் நினைவுகளில் மூழ்கிட செய்யுங்கள்!

இது மாதிரியான நினைவுகளைப் படித்ததும் நண்பர்கள் வட்டத்தில் பகிரவில்லையெனில் உங்களது தலைமுடி கொட்டி விடுமாம்.



–
இரா. செந்தில் குமரன்
மன்னார்குடி.

# சொந்த ஊருக்கு போக

அழைக்கும் போதெல்லாம்,
நம்ம ஊருக்குப் போனால்
தான் வளர்க்கும் பூனைக்குட்டிக்கு
யார் உணவளிப்பார்கள்
என்ற
ஒற்றைக் கேள்வியில்
தொலைத்திருக்கிறாள்... பர்கானா,
பல நூறு வருடமாய்
கேலியாயயிருக்கும் மனிதநேயத்தை!

***

ஒலிம்பிக்கில் வெள்ளி வென்ற
வீராங்கனையைப் பற்றி
அதிகாலைத் தொடங்கி அந்தி சாயும்
வரை,
வருவோரிடமும் போவோரிடமும்
புகழ்ச்சியாய்
பேசிக்கொண்டிருக்கிறார்...
முன்பொரு நாள் தற்காப்பு கலையை
கற்க விரும்புவதாய்
சொன்ன மகளிடம்,
நீயென்ன ஆம்பளை பையனா,
என ஒற்றை வார்த்தையில் அடக்கிய
அப்பா!

***

பறவைகள் மீதான காதலில்
ஒரு வனம் ஒன்றை
உருவாக்கி,
தாகம் தீர்க்க அருவி ஒன்றை
வரைந்து முடிக்கிறேன்...
பலத்த காற்றொன்றில் இழுத்து
செல்லப்பட்ட ஓவியத்தை
வேதனையோடு பார்த்துக்
கொண்டிருக்கின்றன...
அகதியாக்கப்பட்ட பறவைகள்!

***

முதல் அலையில்
ஒரு வேளை
பட்டினி,
இரண்டாம் அலையில்
இரண்டு வேளை பட்டினி,
மூன்றாம் அலையில்
என்னவாகுமோ என
புலம்பிக்கொண்டிருக்கிறாள்
சாலையோரத்தில் காய்கறிகள்
விற்றுக்கொண்டிருக்கும் சரசுப்பாட்டி,
வாழ்வதற்கும் மறைவதற்குமான
இடைவெளியில்,
எரிக்கும் நெருப்பாகிறது அக்கேள்வி
சேமிப்புள்ளவர்கள் சேமித்து
வைத்துக்கொள்கிறார்கள் தங்கள்
உயிரை,
ஏதுமற்றவர்கள் எதிர்பார்ப்பற்று
வீழ்கிறார்கள்,
எல்லோரும் சமமென்ற தேசத்தில்
மரணம் மட்டும் வறுமைக்குள்ளே
அதிகம் பூத்துக்குலுங்குகிறது...
எவ்வித வாசமுமில்லாமல்!

***

எல்லோருக்கும் எல்லோரையும்
பிடிப்பதுமில்லை,
எல்லோருக்கும் எல்லோரையும்
பிடிக்காமலிருப்பதுமில்லை,
சிலருக்கு பிடித்தும்
பிடிக்காமலிருக்கும் இந்த

வாழ்க்கையைப் போல!

***

சிலர்
கோபப்படுகிறார்கள்
சிலர்
காயப்படுத்துகிறார்கள்
சிலர்
விலகிப்போகிறார்கள்
சிலர்
துரோகத்தை விதைக்கிறார்கள்...
ஆறுதல் தந்து
கொண்டேயிருக்கிறார்கள்,
சோட்டா பீமும் காலியாவும்!

***

நாய்கள்
வாலாட்டிச் சொல்கின்றன..
செடிகள்
பூப்பூத்து சொல்கின்றன...
மரங்கள்
காய்காய்த்து சொல்கின்றன...
சத்தமில்லாமல்
கடந்துகொண்டிருக்கிறார்கள்
எப்படி நன்றி சொல்வதென
தெரிந்தும் தெரியாதது
மனிதர்கள்!



–
மு.முபாரக்




**நிவேதிதா இராசகோபால்**
பரவாக்கோட்டை
ஐந்தாம் வகுப்பு

# 1. பலூன்காரனும் ஏழை குழந்தையும்

தன் கனவுகளையும்
துன்பங்களையும்
பலூனில் நிரப்பி
விற்பனைக்குச் செல்கிறான்
பலூன்காரன்.
ஆயிரம் வண்ணங்களில்
பலூன் விற்பவனின் வறுமையை
ஒரே நிறத்தால் மட்டுமே
எழுத முடியும்.
காற்றடித்த பலூனை மேலே
பறக்கவிடும் பொழுதெல்லாம்
எப்பொழுது கீழே விழுமென
ஆவலோடு வானத்தைப் பார்க்கிறாள்
ஏழை குழந்தை.

–

2. ஒவ்வொரு நிமிடங்களிலும் ஒளிந்து
தாக்கும்
உன்னை சுவைக்கிறேன் மாயா
ஒரு முத்திரை வழியாக.

--

3. மூழ்கிப்போகும் இந்த இரவின்
இடைவெளியில்
எஞ்சியுள்ளது வாழ்வு.

--

4. வெட்ட வெட்டத் துளிர்க்கும்
மரத்திற்கு
புத்தனின் ரசவாதம்
பலிப்பதில்லை.

--

5. விளக்கிற்கு உயிர்கொடுக்க
மனிதனைத் தேடுகிறது
இருளின் முகம்.

--

6. மூங்கிலைத் தீண்டி
உறங்கும் இசையைக்
கேட்டுக்கொண்டே
வெகுதூரம் செல்கிறது காற்று.

--

7. நீர்நிலையும் நிலைக்கண்ணாடியும்
எத்தனையோ பிம்பங்களை
சேகரித்துப் பேசித்தீர்க்கிறது.

--

8. இரவில் யாருமற்ற தெருவை
ரசித்துப் பாடிய தெரு பாடகனாய்
விடைபெறுகிறது பிறை.

--

9. பட்டம் விடும் பொழுதெல்லாம்
வானத்தில் பறவைகளாகி
சிறகு விரிக்கிறார்கள் சிறுவர்கள்.

--

10. ஆழமான குளிரில்
அதிக வெப்பம்

தேவைப்படுகிறது
அப்பொழுதெல்லாம்
உன் பெயரையும்
உன் உருவத்தையும்
உச்சரிக்கிறேன்
இறுதிவரை
உன் நித்திய உருவத்தில்
அவ்வளவு ஒளி.

--

11. பெரும் துயரம் தாங்கி எரியும்
மெழுகுவர்த்தி
இருளோடு மெல்லிசை எழுப்பி
வெளிச்சத்தின் கூர்முனையால்
இருளை வரைந்து தோற்கிறது
யாரும் தன்னை விலக்க முடியாத
பெரும் போர்வையை
ஒளி நிர்வாணமாக்கி
கடந்து இயல்பு நிலையை அடைவது
இருளின் வேலை
கடல் நிலத்தின் பெருங்கருணையோடு
உப்பு காற்று கலந்து சுவாசிக்கும்
என் நெஞ்சில் பூமி துண்டாடப்பட்ட
மனிதர்களின் கருத்துகளுக்கு
எதிரானது தான்
ஒருவரோடு ஒருவர் தாக்கி மடியும்
கருணையற்ற கனவுகளோடு திரியும்
மனித விலங்கு
ஒரு கதையையும்
கவிதையையும் சுமந்து திரிகிறது
பூமியெங்கும்
இப்படியே திரியும் மனிதன் தனக்கான
நில அடையாளங்களை
வெளிப்படுத்த வேண்டும்
என் பூமியின் தோலின் நிறம் பசுமை
கலந்தும் நீலநிற பெருஞ்சுவரோடு
உப்பு காற்றின் கருணையால்
தியானத்தில் ஆழ்ந்திருக்கிறது
வறுமையின் குரல்களுக்கு மத்தியில்
கடலின் வசந்தமோ ஒரு துளி
கண்ணீரில்
திறந்து கிடக்கிறது.

–

12. எனது பால்யத்தில் தந்தைவழி
அடக்குமுறைகளில் அடிபட்டேன்
எந்த விலங்கும் தன் பிள்ளைகளை
அடக்கவில்லை
எந்த தாக்குதலையும் சமாளித்து
நிலமெங்கும் ஓடியது
பறந்தது
மனிதவியலில் மட்டும் தனக்கான
ஒடுக்கு முறை அரசியலை
அடுக்குகளாக்கியது
அறிவியலான் கண்டுபிடித்த குரங்கு
அரசியலை ஏற்று
இன்று குளோனிங் செய்யும் நிலைக்குத்
தள்ளப்பட்ட விலங்காக மாறப்போகும்
மனிதனின் எதிர்காலப் பிணைப்புகள்
நில அரசியலை மையப்படுத்தியது
குளோனிங் மனிதனை நிலவிற்கு
அனுப்பி இடம்பெயர்வு செய்யத்
துடிக்கும்
காலநிலை மாற்றத்தில்
நிலவெறி மரபைக் கழற்றி
வெற்றுடலுக்கு தயார் செய்யும்
சூட்சமங்கள்
நில அடிமை என்பதும் அரசியல்
வாதிகளின் கீழ் வாழ்வதென்பதும்
ஒன்றுதான்
அதிகாரம் எப்பொழுதுமே அடிமை
படுத்தியே களம் நகர்த்துகிறது
மனித மாமிசங்களை மனிதர்களுக்குத்
தெரியாமல் உண்ணும் சமூக

அமைப்பின் கொடூரத்திற்குப்
பலியாகும்
ஈசலின் வழித்தோன்றல்களாகவே வாழ
விரும்ப வில்லை நான்
என் எதிர்வினை சேமிப்புகள் இன்னும்
உடலில் சுழன்று கொண்டேயிருக்கும்
வரை விடுதலைக்கான தேடல் இருந்து
கொண்டேயிருக்கும்
என்னை ஒரு கோடி பிரதி எடுங்கள்
கலகத்தின் முழு வீச்சில் தடுமாறி
நிலைகொள்ளும் நில அரசியல்.

--

*14.* மழை பட்டுச் சிதறிய
மண் முழுவதும்
சிறு பள்ளங்களைச் செய்திருப்பது
ஏனென்று தெரியவில்லை எனக்கு
மண்ணை நோக்கும் கணத்தில்
மேலிருந்து
ஒரு பறவையின் எச்சம் வீழ்ந்தது
என்னை வெட்கப்படுத்தியது
இத்தனை நாட்கள் மழையை
வெறுமனே பார்த்து விட்டேனே என்று
ஒரு விதையைச் சுமந்துவந்த பறவை
வனத்தை நோக்கியதும்
என் கண்கள் வானத்தில்
பறக்கும் பறவையால் கவனம்
பெற்றதும்
மழைபெய்யத் தொடங்கியது
என் வனத்தில்.

--

*15.* என் வாழ்வு எனும்
காலக்கோடுகளில்
துன்பங்களின் தோரணைகள்
அடுக்கடுக்கான வேதங்களை
சாரலிட்டு நனைந்தது காலம்
சித்தாந்தங்களை நிலைக்கச்செய்யும்
வேலையில் ஓர் நகர்வு
சொற் சண்டையில் ஆரம்பித்து
நிலத்தில் நிலைகொள்ளும் காலமே
உடல்
பூமி கிழிந்து தைத்துவிடும்
பார்த்த கண்களை மூடியது மண்
விறகு எரிந்து பறக்கிறது
துடித்த இதயம் நடுங்கப் பாய்ந்தது தீ
என் வேதனைகள் ஒன்றும் புதிர் அல்ல
என் வாழ்வு ஒன்றும் மண் அல்ல
எழுத்து விதைகளைத்
தூவிவைத்திருக்கிறேன்
எந்த மனங்களிலாவது இடம் தரட்டும்
பழமையில் லயத்து விடுகிறது மனம்
பீஷ்மரின் அம்பு படுகையில் மலர்கிறது
மரணம்
துன்பத்தில் துளைத்தெடுக்கும்
அம்புகளுக்கு மத்தியில் ஓர் மலர்ச்சி
சரணடைகிறேன்
நிராயுதபாணியாக நிற்பதால்
துன்பமே உன்னைச் சரணடைகிறேன்
எனக்கான
சொர்க்கத்தையும்
நரகத்தையும்
உங்கள் வார்த்தைகளே உருவாக்கி
வைத்திருக்கிறது
மனிதர்களை வாழ்வின் மீது
போர்தொடுத்துகொண்டே நகர்த்தி
நீளச்செய்கிறது காலக்கோடு.

--

*16.* கிழமைகள பிரிதல்

இன்று ஞாயிற்றுக்கிழமை
கடைக்காரர்களுக்குப் பெருத்த

கொண்டாட்டம்
அவர்கள் இழந்த ஞாயிற்றுக்
கிழமைகளில் தொடர்கிறது நமக்கான
இன்பம்
தினந்தோறும் சாப்பிடும் உணவின்
ருசியிலிருந்து
இன்று மட்டும்
மாறுபட்டுப் போனது
உணவின் ருசி
ஞாயிறு விடுமுறை காற்று அத்தனை
அழகாக இருக்கிறது
நண்பனின் தொலைப்பேசி அழைப்பு
அக்காவின் தொலைப்பேசி
உரையாடல்கள் எனச் சொற்களின்
சாயலில் கூட ஞாயிறு
ஒட்டிக்கொண்டது
குழைகளுக்குத் தலை மூழ்க
எண்ணெய் தேய்த்து விடுவது
அவர்களுடன் கதைசொல்லி
விளையாட்டு
அவர்கள் சொல்லும் கதைகேட்டு
விளையாட்டு
குழந்தைகளோடு அமர்ந்த
தொலைக்காட்சி பார்வை
குழந்தைகள் உலகத்தோடு
ஒரு சுவையான டிரவல்
சற்று நேர பீச் காற்று என ஞாயிறு
மறைந்துபோனாலும்
திங்கள்கிழமை காலை மட்டும்
இறுகிப்போகிறது என் பள்ளி செல்லும்
குழந்தைகளுக்கும் எனக்கும்
அனைத்து கிழமைகளையும் ஒரு சேர
புன்னகைத்துப் பூக்கும் மனைவியின்
அதிகாலை திருவிழாக் கோலத்தைத்
தாண்ட மனமில்லாமல்
வெள்ளிக்கிழமை மாலை எப்பொழுது
வரும் என்ற ஏக்கத்துடன் கடக்கிறேன்
திங்கள் கிழமை காலையை
அம்மாவின் அன்பில் கரைந்து போன
குழந்தைகளின் கண்களில் நீர்துளிர்த்து
நேசம் வளர்ந்த பிரிவோடு.

–

17. எத்தனையோ எழுத்துக்கள்
தவிக்கிறது
காகித குவியல்களில்
நான் அதில் என்னைத் தேடுகிறேன்
என் பெயரோடு
என்னை அழைத்தார்கள்
விருப்பமான பெயர்களில்
நானும் அழைக்கிறேன் சில
பெயர்களை
எனக்குப் பிடித்த எழுத்தாளர்கள்
கூறியிருப்பது எனக்குப்
பிடித்திருக்கிறது
ஓலைச்சுவடியிலிருந்து காகிதத்திற்குத்
தாவிய எழுத்துகள்
டிஜிட்டல் வடிவம் எடுத்திருக்கிறது
எழுத்தின் பிரவாகத்தில் மனிதனைத்
துளைக்கும் இதயமாய் வீசுகிறது
வசந்தமும் வரலாறும்
எல்லா எழுத்துகளும் கருப்பு மையால்
பின்னப்பட்டு
கருவிழியில் பிரகாசிக்கிறது
பெருந்துயரத்துடனும்
பெரும் மகிழ்ச்சியுடனும்
பூக்களைப்போல்
வேர்களைப்போல்
மலையைப்போல்
சூரியனைப்போல்
பகலை இரவால் நிரப்பும் மதுவைப்
போல்
மகிழ்விக்கின்றன எழுத்துகள்

நான் எழுத்துடன் பேசும்பொழுது உங்களையும் உச்சரிக்கிறேன்
உங்கள் இதயத்தையும் சுவாசிக்கிறேன் ஒரு பெரும் முத்தத்தோடு
இந்த பூமியின் சருமம் முழுவதும்
எழுதியிருக்கும் எழுத்துகளைப் படிக்க
என் காலடி சுவடுகளைத் திரும்பிப் பார்க்கிறேன்
அந்த கணம்
மழை பெய்து எழுதும் எழுத்துகளைப் புரிந்து கொள்ள ரசிக்கிறேன்.

–

ப.தனஞ்ஜெயன்

---



**கௌசல்யா,**
**எட்டாம் வகுப்பு,**
**சென்னை**

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
டணாணாணீ://ட்ச்டிணணாடச்ஞூடுச்டூ.ட்ச்ணணச்டி.டிண

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில்).

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு.

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்.

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது.

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு.

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்.

சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்

பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்.

நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி.

குழாய் பதிக்கும் பணி.

விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு.

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு.

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal

ThiravukolMagazine